2013 ஏப்ரல் 5]

செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தக்கூடிய வகையிலே இது அமையுமோ என்கின்ற ஒரு அச்ச உணர்வு இருக்கின்றது. எனவே, இதைத் தடுப்பதற்கும் நம்முடைய மாநில அரசுக்கு குறிப்பாக வனத் துறைக்கு, . . .

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள், மூலக் கேள்விக்கு சம்பந்தமான துணைக் கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலைமீது நமக்கு இருக்கக்கூடிய மாநில அரசின் உரிமையை வனத் துறையினுடைய உரிமையை நிலை நிறுத்திக்கொள்வதற்கு மாநில அரசு எந்தவிதமான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது, எடுக்க இருக்கிறது என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிமிருந்து அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலையிலே தமிழக அரசுக்குள்ள உரிமையை என்றைக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விட்டுக்கொடுக்காது என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 155, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

155—

சாலையை அகலப்படுத்துதல்

***6111—திரு. ந. நஞ்சப்பன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் சுற்றுலா மையத்திற்குச் செல்லும் சாலையை அகலப்படுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் சுற்றுலா மையத்திற்குச் செல்லும் சாலையில் குறுகலான பகுதியிலிருந்த பாறைகள் உடைக்கப்பட்டு, சாலைகள் அகலப்படுத்தப்பட்டுள்ளதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.*

திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் சுற்றுலா மையம் காவேரியாற்றில் அமைந்துள்ள மிகச் சிறந்த இயற்கை அழகுவாய்ந்த நீர்வீழ்ச்சிகளைக் கொண்டது. தமிழக மக்கள் மட்டுமல்லாது கர்நாடகா, கேரளா, ஆந்திரா மற்றும் வெளி மாநிலங்களைச் சேர்ந்த மக்களும், வெளி நாட்டைச் சேர்ந்தவர்களும் இலட்சக்கணக்கான பயணிகள் வந்து சென்று கொண்டிருக்கிறார்கள். பயணிகளின் மிக அதிகமான வாகனப் போக்குவரத்தால் தினமும் நெருக்கடிகளும், பல விபத்துகளும் ஏற்படுகின்றன. விபத்துகளைத் தடுத்து மனித உயிர்களைக் காக்கவும், பாதுகாப்பான சூழ்நிலைகளை உருவாக்கும் வகையில் சாலைகளை நான்கு வழிச் சாலைகளாக மாற்றவும் நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல், பெண்ணாகரம், தருமபுரி, திருப்பத்தூர் மாநில நெடுஞ்சாலை, நெடுஞ்சாலை எண் 60 கிலோ*

2013 ஏப்ரல் 5]

மீட்டர் 0/0-விலிருந்து 12/4 வரை காப்புக் காட்டிற்குள் செல்கின்றது. இச்சாலையில் கிலோ மீட்டர் 9/2-லிருந்து 9/6 வரை கடினப் பாறைகள் இருந்தது அகற்றப்பட்டு தற்போது போக்குவரத்திற்கேற்றவாறு இரு வழிச் சாலையாக அகலப்படுத்தப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, இச்சாலையில் போக்குவரத்து செறிவு அதிகமில்லாத காரணத்தினால் நான்கு வழிச் சாலையாக மாற்ற சாத்தியக்கூறு தற்போது இல்லை என்பதையும், அது வனப் பகுதிக்குள் செல்கின்ற காரணத்தினால் வனத் துறையிடம் அனுமதி பெற வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிற காரணத்தினாலே எதிர்காலத்திலே போக்குவரத்து செறிவு அதிகம் ஏற்படுகின்றபோது மையத் தடுப்புச் சுவருடன் சாலையினை அகலப்படுத்துவதற்கு அரசு நிதிநிலைக்கேற்ப ஆவன செய்யும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.*

திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் சுற்றுலா மையத்திற்குச் செல்லும் சாலையில் ஆபத்தான கணவாய்ப் பகுதிகளில் அண்மைக்காலமாக கற்கள் உடைக்கப்பட்டு நேர்த்தியுடன் பணிகள் சிறப்பாக நடந்து வருகின்றன. அதுமட்டுமல்லாது, சின்னம்பள்ளி, தொப்பையாறு பகுதியிலும் கணவாய்கள் அகலப்படுத்தப்பட்டு வருகின்றன. அதற்காக அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒகேனக்கலுக்கு தினந்தோறும் வரும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகமான அளவில் வந்து திணறலை ஏற்படுத்திக் கொண்டிருக்கிற நிலையில் விடுமுறைக் காலங்களில் ஏராளமான வாகனங்கள் வருகிற காரணத்தால் வனத்துக்குள்ளேகூட 4 கிலோ மீட்டர், 5 கிலோ மீட்டர் அளவுக்கு வாகனங்கள் நிற்கின்றன. தருமபுரி-பெண்ணாகரம் சாலையில் பல கல்வி நிறுவனங்கள் அண்மைக்காலமாக ஏராளமாக தொடங்கப்பட்டிருக்கிற நிலையில் கல்லூரி, பள்ளி வாகனங்களும் அதிகரித்துவிட்டன. அண்மையில் ஏற்பட்ட விபத்தில்கூட கல்லூரி மாணவியர்கள் நான்கு பேர் உயிரிழந்தார்கள். பலபேர் இன்றைக்கும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். அடுத்த மூன்றாவது நாளே இன்னொரு விபத்து ஏற்பட்டு கல்லூரி மாணவர்கள்*

இறந்திருக்கிறார்கள். இப்படி பல விபத்துகள் ஏற்பட்டவண்ணம் இருக்கின்றன. சுற்றுலாப் பயணிகள் வாகனம், கல்வி நிறுவனங்களின் வாகனங்கள் வழக்கமாக இயங்குவதற்கு மேலாக, பயணிகளின் வாகனங்கள் வருகிற காரணத்தினாலே ஏராளமான நெருக்கடிகள் ஏற்படுகின்றன. ஏற்கெனவே திருப்பத்தூர், ஜோலார்பேட்டையிலிருந்து ஒகேனக்கல் பிளிகுண்டுலு வரை நான்கு வழிச்சாலையாக ஆக்கப்படுவதற்கான கோரிக்கை நீண்டநாட்களாக வலியுறுத்தப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளதாக அறிகிறோம். எனவே, இந்த முக்கியமான சாலையை நான்கு வழிச் சாலையாக அமைத்துத் தருவதன்மூலமாக விபத்துகளைத் தடுக்க இயலும். பெரும்பகுதியான நிலங்கள் வருவாய்த் துறையின் நிலங்கள் வழியாகத்தான் இந்தச் சாலைகள் செல்கின்றன. அதேபோல, ஒகேனக்கல் வனப் பகுதிக்குள் செல்கின்ற சாலை ஏற்கெனவே நெடுஞ்சாலையாக உள்ள காரணத்தாலே வனத் துறையின் அனுமதி பெறவும் அதில் வாய்ப்பு இருக்கிறது. எனவே, சூழ்நிலையைக் கருதி, வளர்ச்சியைக் கருதி பயணிகளின் பாதுகாப்பு நலன் கருதி இச்சாலையை நான்கு வழிச் சாலையாக அமைத்துத் தர அரசு பரிசீலனை செய்யுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல், பெண்ணாகரம், தருமபுரி, திருப்பத்தூர் சாலை மாநில நெடுஞ்சாலையாகும். இச்சாலையில் 9/2-லிருந்து 9/6 வரை கடினப்பாறை இருந்ததால், இந்தத் தடம் இடைவெளித்தடமாக 5.50 மீட்டர் அகலத்தில்தான் போக்குவரத்திற்கு உபயோகிக்கப்பட்டு வந்தது. இரண்டு மாதங்களுக்கு முன் கடினப் பாறைகள் அகற்றப்பட்டு தற்போது போக்குவரத்துக்கு ஏற்றவாறு இருவழிச்சாலையாக, 7 கி.மீ. வரை சாலை அகலப்படுத்தப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, பெண்ணாகரத்திலிருந்து ஒகேனக்கல் வரை 7 மீட்டர் அகலம் கொண்ட இரு வழிப் பாதையாக தற்போது இருக்கின்றது. குறிப்பிட்ட விடுமுறை நாட்களில்தான் அதிகப் பேருந்துகளும், வாகனங்களும் ஒகேனக்கல்லுக்குச் சென்று கொண்டிருக்கின்றன. ஆகவே, இச்சாலையில் போக்குவரத்துச் செறிவு குறித்து ஆய்வு

செய்யப்பட்டது. இந்த ஆய்வில், இங்கு அதிகப் போக்குவரத்து இல்லாத காரணத்தினால், நான்கு வழிச் சாலைகள் அமைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை. எதிர்வரும் காலத்தில் போக்குவரத்து செறிவு அதிகம் ஏற்படுகின்றபோது, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று நிதிநிலைக்கேற்ப அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 156, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

156—

பால் குளிரூட்டும் நிலையம்

***21317—திரு. வே. குணசீலன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன் வந்தவாசி தொகுதியில் மொத்தம் 64 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. இச்சங்கங்களில் இருந்து நாளொன்றுக்கு சுமார் 13,800 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, வந்தவாசி தொகுதியில் அமைந்துள்ள அணக்காவூர் பால் குளிரூட்டும் நிலையத்திற்கு வழங்கப்படுகிறது. அணக்காவூர் பால் குளிரூட்டும் நிலையம்